**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், எம்.எ., பி.எல்.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் நாள் வெள்ளிக்கிழமை

**IA.No.05/2025 in OS.No.12/2018**

**(TNTM03000020/2018)**

1. M.வெங்கடேசன்

2.V.செல்வம்

3.V.பாலாஜி

4.V.தங்கராஜ் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. M.குமார்(இறந்தார்)

2.M.ஏழுமலை

3. காசியம்மாள்(இறந்தார்)

4. பூங்காவனம்

5. சாந்தி

6. ராணி

7. C.இளயகுமார்

8. தஞ்சம்மாள்

9. சரவணன்

10. அஜித் (எ) அஜித்குமார் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 08.07.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சிவக்குமரன்,B.A., B.L., திரு.S.கைலாஷ்,BE.,MBA.,BL., ஆகியோர்கள் முன்னிலையாகியும், 1,2,3,4 மற்றும் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.சரவணன்,B.A.,B.L., அவர்கள்

முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

<u>**உத்தரவு**</u>

மனு ஷெட்யூலில் கண்டுள்ள விவரப்படி மனுவை திருத்தம் செய்ய கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1**. 1ம் மனுதாரர்/1ம் வாதி தாக்கல் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர் இந்த மனுவில் 1–ம் மனுதாரர், அசல் வழக்கில் 1–ம் வாதி. அசல் வழக்கானது பாகபிரிவினை பரிகாரம் கேட்டு மனுதாரர்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. 3ம் பிரதிவாதி காசியம்மாள் 26.03.2023ம் தேதி இறந்துவிட்டார். அவரின் வாரிசுகள் இந்த வழக்கில் ஏற்கனவே வாதிகள் மற்றும் பிரதிவாதிகளாக உள்ளனர். 1ம் பிரதிவாதி குமார் 29.01.2020 தேதியன்று இறந்துவிட்டார். அவரின் வாரிசுகளை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க இ.ம.எண்.3/2023 மற்றும் இ.ம.எண்.4/2023 என்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அவை 31.01.2025ம் தேதி இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே வழக்குரையில் 1 மற்றும் 3 பிரதிவாதிகள் இறந்தார்கள் என்றும், 1ம் பிரதிவாதியின் வாரிசுகளை 8 முதல் 10 பிரதிவாதிகளாக சேர்த்து வழக்குரையை திருத்தம் செய்ய இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2**. 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிருரை சுருக்கம்:–**

மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்து இருக்கும் இம்மனுவை சட்டப்படியும் நியாயப்படியும் செல்லாது ஏற்புடையதல்ல. மனு சங்கதிகள் அனைத்தும் பொய்யாக கூறபட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் இந்த பதிலுரையில் ஒப்புகொள்ளும் சங்கதிகள் தவிர இதர சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டியது. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யபட்டுள்ள மனுவானது காலதாமதமாக நீதிமன்றத்தில் உரிய கால அவகாசம் வழங்கப்பட்டும் குறித்த நேரத்தில் தாக்கல் செய்யாமல் விசாரணையினை காலதாமதபடுத்தவேண்டும் என்ற நோக்கில் தாக்கல் செய்யபட்டுள்ளது. மனுதாரர்கள்

தாவாவின் விசாரணையினை திசை திருப்பவேண்டும் என்று வேண்டுமென்றே இந்த மனுவினை காலதாமதமாக சரியான வழக்கு ஆவணங்கள் இன்றி தாக்கல் செய்திருக்கின்றார்கள். ஆதலால் ஏற்கக்கூடியது அல்ல தள்ளுபடி செய்யபட வேண்டும். எனவே மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவினை 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

3. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், வழக்கில் தரப்பினராக சேர்க்க வழக்குரையை திருத்தம் செய்ய கோரியுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்தா? இல்லையா? என்பதே ஆகும்.

4 மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழி சாட்சியா ஆவண சாட்சியம் முன்னிலைப்படுத்தவில்லை.

5. **<u>பிரச்சனைக்கான தீர்வு:–</u>**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அசல் வழக்கானது பாகபிரிவினை பரிகாரம் கேட்டு மனுதாரர்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. 3ம் பிரதிவாதி காசியம்மாள் 26.03.2023ம் தேதி இறந்துவிட்டார். அவரின் வாரிசுகள் இந்த வழக்கில் ஏற்கனவே வாதிகள் மற்றும் பிரதிவாதிகளாக உள்ளனர். 1ம் பிரதிவாதி குமார் 29.01.2020தேதியன்று இறந்துவிட்டார். அவரின் வாரிசுகளை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க இ.ம.எண்.3/2023 மற்றும் இ.ம.எண்.4/2023 என்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அவை 31.01.2025ம் தேதி இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே வழக்குரையில் 1 மற்றும் 3 பிரதிவாதிகள் இறந்தார்கள் என்றும், 1ம் பிரதிவாதியின் வாரிசுகளை 8 முதல் 10 பிரதிவாதிகளாக சேர்த்து வழக்குரையை திருத்தம் செய்ய இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. இறந்துபோன 1ம் பிரதிவாதியின் வாரிசுகளை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க தாக்கல் செய்யப்பட்டிருந்த இ.ம.எண்.3/2023 மற்றும் இ.ம.எண்.4/2023 என்ற மனுக்கள் இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதியின் வாரிசுகளை

அசல் வழக்கில் சேர்க்கவும், 3ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்ற விவரத்தை வழக்குரையில் திருத்தம் செய்யவும் தாக்கல் செய்துள்ள இம்மனு ஏற்கும் வகையில் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. வழக்குரையை திருத்தம் செய்ததால்தான் அசல் வழக்கை மேல் நடத்தி தீர்வு காண முடியும் என்பதால் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக,** மனுதாரர் மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKAREN S
Digitally signed by BASKARAN S
Date: 2025.08.01 17:55:18 +0530

சார்பு நீதிபதி,
ஆரணி.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றிவணங்கள்:–</u>** இல்லை

BASKARAN S
Digitally signed by BASKARAN S
Date: 2025.08.01 17:55:28 +0530

சார்பு நீதிபதி,
ஆரணி.